*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 336/2022***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-1 (LW-1)***

*Name / Father's Name:* ***திரு.ஜெயக்குமார் த/பெ. மகேந்திரன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **19.05.2026.**

துவக்க நேரம் 04.12 A.N

**எதிரி ஆஜரில்லை. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரி தரப்பில் U/s.355 of BNSS மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது அரசநத்தம் கிராமத்தில் குடியிருந்து, வழக்கறிஞராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22.06.2023 அன்று இரவு 07.30 மணியளவில் நான், எனது வீட்டில் இருந்தபொழுது எங்கள் வீட்டிற்கு சற்று தொலைவில் சண்டை நடக்கும் சத்தம் கேட்டு நான் அருகில் சென்று பார்த்தபொழுது அங்கு சுமார் 20, 30 நபர்கள் கூட்டமாக சண்டையிட்டுக்கொண்டிருந்தார்கள்.

2) அந்த சண்டையை விலக்கிவிட நான் சென்றபொழுது அந்த கூட்டத்தில் ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நான் கீழே விழுந்ததில் எனக்கு சிராய்ப்பு காயம் மட்டும் ஏற்பட்டது. அந்த கூட்டத்தில் எதிரியும் இருந்ததால், அவர்தான் என்னை தள்ளியிருப்பார் என்று எண்ணி அவரது பெயரை குறிப்பிட்டு சொல்லி புகார் கொடுத்தேன்.

3) என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் மனுவில் உள்ள புகார்தாரர் கையெழுத்து மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அதன் பின்னிட்டுதான் எதிரி,

என்னை கீழே தள்ளிவிடவில்லை என்று எனக்கு தெரிந்தது. போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**அரசுத்தரப்பு சாட்சி போலீசாரின் குவிமுச 161 விசாரணையின் போது கூறிய சங்கதிகளுக்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளதால், அரசுத்தரப்பில் பிறழ்சாட்சியாக கருதி சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.**

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

எதிரி அருண், எனது பக்கத்து காட்டுக்காரர் மற்றும் எனக்கு நன்கு தெரிந்தவரா என்றால் ஆமாம். கடந்த 23.06.2022 ம் தேதி இரவு 07.30 மணிக்கு எதிரி அருண் என்பவர், எனது காட்டில் மூலையில் நின்று என்னை கெட்ட வார்த்தையால் திட்டி, என்னை கொலை செய்துவிடுவதாக மிரட்டி, எங்களது காட்டை, எதிரி அருணுக்கு விற்றுவிட்டு ஊரைவிட்டு ஓடிபோகச்சொல்லியும், இல்லையென்றால் என்னையும், எனது அப்பாவையும் கொலை செய்துவிடுவேன் என்றும் கொலைமிரட்டல் விடுத்தார் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு, தற்பொழுது எதிரி எனது பக்கத்து காட்டுக்காரர் மற்றும் எனக்கு நன்கு தெரிந்தவர் என்பதால் எதிரியை இவ்வழக்கிலிருந்து காப்பாற்ற எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.
முடிவு நேரம் 04.25 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2026.05.19 17:23:15 +0530

Judicial Magistrate No.2, Attur.